இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 160 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 07 – புதன்கிழமை 21 ஜனவரி 2026 – திருச்சி★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 160 : Thiruvalluvar Year - 2057 - Thai 07 - Wednesday 21 January 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### ஒன்றிய விசாரணை அமைப்புகள்

## ஜனநாயகத்தைச் சீர்குலைக்கின்றன!

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் மம்தா கோரிக்கை!



புதுடெல்லி, ஜன. 21- ஒன்றிய அமைப்புகளிடம் இருந்து ஜனநாயகத்தை காப்பாற்றுமாறு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்திடம் மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற விழாவில், தலைமை நீதிபதி சூர்ய காந்த் பங்கேற்ற நிலையில், மேடையில் உரையாற்றிய முதல்வர் மம்தா பானர்ஜி, ஒன்றிய விசாரணை அமைப்புகள், அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாக குற்றம்சாட்டினார்.

மேலும், ஜனநாயகத்தை ஒன்றிய விசாரணை அமைப்புகள் சீர்குலைக்கின்றன என்றும் விமர்சித்தார். அமலாக்கத்துறை, சிபிஐ போன்ற ஒன்றிய புலனாய்வு அமைப்புகளின் தேவையற்ற தலையீடுகளில் இருந்து சாதாரண மக்களையும், நாட்டின் அரசியலமைப்பையும், ஜனநாயகத்தையும் தயவு செய்து காப்பாற்றுங்கள் என்றும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்தி டம் கேட்டுக்கொண்டார்.

நீதித்துறை மட்டுமே தங்களின் கடைசி நம்பிக்கை, எனவே அரசியலமைப்பைப் பாதுகாக்க நீதிமன்றம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று கூறினார்.

### பொங்கல் தொகுப்பு:

## விடுபட்டவர்களுக்கு விநியோகம்!

சென்னை, ஜன. 21 - தமிழ்நாடு முழுவதும் இதுவரை 2.15 கோடி பேருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டவர்களும் பொங்கல் பரிசு தொகுப்பை பெற்று கொள்ளலாம் என்று கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.



தமிழ்நாடு முழுவதும் 24,924 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வந்தது. இதற்காக சுமார் 50,000க்கும் மேற்பட்ட கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதன்படி இதுவரை 2.15 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு ரூ.6453.54 கோடி ரொக்கம் வினியோகிக்கப்பட்டுள்ளது. அதாவது குறுகிய நாட்களுக்குள் 97% பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

மேலும், மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்று பயன் பெறலாம் என்று தமிழக அரசின் கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு " மாமல்லன் நீர்த் தேக்கம்" என்று பெயர் சூட்டி, நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் பொதுப்பணி திலகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடந்த 5 ஆண்டுகளில் சென்னையின் முகமே மாறிவிட்டது!

# ‘மாமல்லன்’ நீர்த்தேக்கம் காலந்தோறும் வாழ்வளிக்கும்!

## புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**மாமல்லபுரம், ஜன. 21 - செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே ‘மாமல்லன்’ புதிய குடிநீர் நீர்த் தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, “மாமல்லன் நீர்த் தேக்கம் மக்களுக்கு காலந்தோறும் வாழ்வளிக்கும்” என்று உறுதிபட பெருமையுடன் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் “மாமல்லன்” புதிய குடிநீர் நீர்த் தேக்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு :-

கோவளம் உப வடிநிலப் பகுதியில் “மாமல்லன்” புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

காற்றும், நீரும் இந்த பூமியில் இருக்கின்ற காரணத்தினால் தான், மனிதர்களும், மற்ற உயிரினங்களும் உருவாகி வாழ்கிறோம்! அதனால்தான், அய்யன் வள்ளுவர் “நீர் இன்றி அமையாது உலகு” என்று உலகப் பொதுமறையில் சொன்னார்.

அதேபோல, புறநானூறிலும் “குளம் தொட்டு வளம் பெருக்கி” என்று சொல்லி, வேளாண்மைக்கு நீர் எவ்வளவு அவசியமானது என்று சொல்லியிருக்கிறார்கள்! அதனால்தான், நீர் நிலைகளைச் சுற்றியே குடியிருப்புகள் அமைவது பழந்தமிழர் மரபு.

அனைத்து வகையிலும், இயற்கையோடு இணைந்ததுதான் தமிழர் வாழ்வு. அதன் தொடர்ச்சியாகத்தான் நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு நடைபெற்று வருகிறது என்பதன் அடையாளம்தான், இந்த மாமல்லன் நீர்த்தேக்கத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

# பிப். 7-ல் விருதுநகரில் தி.மு.க. இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கடந்த 14.12.2025 அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில், 28 கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் முதல் பாகம் வரை, வாக்குச் சாவடி அளவிலான இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் என ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகள் வெண் சீருடை அணிந்து, “பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ” என்று சொல்லத்தக்க வகையில், அகிலமே வியக்கும் வண்ணம் மாபெரும் எழுச்சியோடு “தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு” வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றிட - **கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., மு.பெ.சாமிநாதன், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளைய ராஜா (தலைவர் - தாட்கோ,) ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி., க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் - விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வரவேற்பில்;

வருகிற **07.02.2026** சனிக்கிழமை, மாலை 4.00 மணி அளவில், **விருதுநகர், ‘கலைஞர் திடலில் “தென் மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு”** நடைபெற உள்ளது.

இதில், தென்மண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை “தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு” அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த “தி.மு.க. இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பில்” அமைச்சர் பெருமக்களான கே.ஆர்.பெரியகருப்பன், பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், த.மனோதங்கராஜ்;

மாவட்டச்செயலாளர்கள்/பொறுப்பாளர்களான இரா.ஆவுடையப்பன், இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., கோ.தளபதி எம்.எல்.ஏ., நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மு.மணிமாறன், மேயர் ரெ.மகேஷ், ஈ.ராஜா எம்.எல்.ஏ., வே. ஜெயபாலன், ம.கிரகாம்பெல் ;

மாநகரச் செயலாளர்களான எஸ்.ஆர்.ஆனந்த சேகரன், எஸ்.ஏ.உதயசூரியன், பரமணி ஆனந்த், ஏ.எல்.பி.தினேஷ், சு.சுப்பிரமணியன், எஸ்.ராஜப்பா;

தென்மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான ம.கணேசன் , தனுஷ் எம்.குமார் , இரா.கிருஷ்ணகுமார் , எ.எஸ்.ஹரிஹரசுதன், சி.எம்.மதியழகன் , நாகனி பா.செந்தில்குமார், பா.வில்சன் மணிதுரை, பை.மு.ராமஜெயம், கே.சம்பத்ராஜா,எம். எஸ்.செல்வம், அ.ஆஜிப்கான், வி.விமல், டி.ஆர்.கிருஷ்ணராஜா, டி.எம்.எஸ். முகேஷ், வி.அகஸ்தீசன், டி.ஜெகநாதன், ஜெ.ஜான் ரபீந்தர், ஏ.ஆர்.சௌந்தர்ராஜன், மு.இளங்கோ;

மாநகர அமைப்பாளர்களான கே.கே.கருப்பசாமி, கோட்டையப்பன், அ.அப்துல் ரஹ்மான், எஸ்.அருண் சுந்தர், சி.டி.சுரேஷ், த.முத்துசெல்வம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா நன்றியுரையாற்றுகிறார்.

“அண்ணா அறிவாலயம்” **தலைமைக் கழகம்,**
சென்னை–600018.
நாள் : 19–01–2026

**தி.மு.க.**